குற்றவியல் நீதித்துறை நடுவர், நீதிமன்றம், ஓமலூர்.
முன்னிலை: திருமதி.S.ஷர்மிளா, B.A.B.L.(Hons.), L.L.M.
குற்றவியல் நீதித்துறை நடுவர், ஓமலூர்.
சி.சி.எண்.182/2013

அ.சா.10

2025–ம் ஆண்டு ஜீன் 20–ம் தேதி வெள்ளிக்கிழமை அரசு தரப்பு சாட்சி 10–வது நபரின் வாக்குமூலம் (1969–ம் ஆண்டின் 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு.ஆனந்தன் என்பவரின் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | அல்லிமுத்து | தொழில் | |
| தந்தை பெயர் | அம்மாசி நாடார் | வயது | |
| கிராமம் | | தாலுக்கா | |

விசாரணை தொடங்கிய நேரம்: மதியம் 01.08 மணி,

Accused A2.Subramaniam present. A1.Ramasami died and charge abated. Advocate Mr.Sidhdharthasankar present for accused. APP Mr.P.Suresh present.

**முதல் விசாரணை :**

1. நான் பெரியாம்பட்டியில் வசித்து, கூலிவேலை செய்து வருகிறேன். கடந்த 2013 ஆம் ஆண்டு ஒரு நாள், தாரமங்கலம் – நங்கவல்லி சாலையில் உள்ள அண்ணா சிலை அருகே இருந்தேன். அப்போது, காவல் ஆய்வாளர் லாரி திருடுபோன வழக்கில் ஒரு நபரை பிடித்து விசாரித்துக் கொண்டிருந்தார். விசாரணையின்போது, அந்த நபர் ஆய்வாளரிடம் என்ன சொன்னார் என்று எனக்கு தெரியாது. அவரது பெயர் எனக்கு தெரியாது. என்னிடம் சாட்சி கையெழுத்து கேட்டார். நான் கையெழுத்து போட்டேன். தற்போது என்னிடம் காட்டப்படும் 1 எதிரி ராமசாமியின் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 1வது கையெழுத்து என்னுடையது. ( **அந்த கையெழுத்து அ.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்படுகிறது**.)

**(அரசு தரப்பு சாட்சியை பிறழ்சாட்சியாக கருதி அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்க கேட்டதின் பேரில் அனுமதி வழங்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்)**

2. போலீசார் என்னை விசாரித்தார்கள் என்றும், அந்த விசாரணையில் கடந்த 30.07.2013 ஆம் தேதி காலை 11.30 மணியளவில் தாரமங்கலம் சந்தைப்பேட்டை அண்ணா சிலை பேருந்து நிறுத்தம் அருகே காவல் ஆய்வாளர் 1 ஆம் எதிரி ராமசாமி

என்பவர் அளித்த ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்தபோது, நான் சாட்சியாக உடனிருந்து சாட்சி கையெழுத்து போட்டுவிட்டு, தற்போது எதிரியின் பெயர், எதிரி ஒப்புதல் வாக்குமூலத்தில் கூறிய விவரங்கள் எனக்கு தெரியாது என பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை : இல்லை**

**மறுவிசாரணை : இல்லை**

**விசாரணை முடிந்த நேரம் : மதியம் 01.13 மணி.**

குற்றவியல் நீதித்துறை நடுவர், நீதிமன்றம், ஓமலூர்.
முன்னிலை: திருமதி.S.ஷர்மிளா, B.A.B.L.(Hons.), L.L.M.
குற்றவியல் நீதித்துறை நடுவர், ஓமலூர்.
சி.சி.எண்.178/2020

அ.சா.1

2025–ம் ஆண்டு ஜீன் 20–ம் தேதி வெள்ளிக்கிழமை அரசு தரப்பு சாட்சி 01–வது நபரின் வாக்குமூலம் (1969–ம் ஆண்டின் 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு.ஆனந்தன் என்பவரின் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | பார்வதி | தொழில் | |
| கணவர் பெயர் | மாணிக்கம் | வயது | |
| கிராமம் | | தாலுக்கா | |

விசாரணை தொடங்கிய நேரம்: மதியம் 01.16 மணி,

Accused A1)Mani @ Vaiyapuri, A2)Chinnamuthu present. Advocate MrEzhilarasan. present for accused. APP Mr.P.Suresh present.

**முதல் விசாரணை :**

1. நான் பாரக்கல்லூரில் குடியிருந்து, கூலி வேலை செய்து வருகிறேன். இவ்வழக்கின் புகார்தாரர் மாணிக்கம் எனது கணவர். அவர் கடந்த 2 வருடங்களுக்கு முன்பு இறந்துவிட்டார். ஆஜர் எதிரிகளைத் தெரியும். சுமார் 5 வருடங்களுக்கு முன்பு, நான் வீட்டிலிருந்தபோது, ஆஜர் எதிரிகளுக்கும், எனது கணவருக்கும் வாய்தகராறு நடந்தது. அவர்களுக்குள் கைகலப்பு நடந்தபோது, கூட்டமாக இருந்தது. நான் அருகில் வந்து பார்த்தேன்.

2. என் கணவருக்கும் சம்பவம் நடந்தபோது காயம் ஏதும் ஆகவில்லை. சம்பவத்தின்போது, கூட்டத்தில் யாரோ இடித்ததில் எனது உதட்டில் காயம் ஏற்பட்டது. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**(அரசு தரப்பு சாட்சியை பிறழ்சாட்சியாக கருதி அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்க கேட்டதின் பேரில் அனுமதி வழங்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்)**

3. போலீசார் என்னை விசாரித்தார்கள் என்றும், அந்த விசாரணையில் கடந்த 10.12.2019 ஆம் தேதி காலை 06.00 மணியளவில் என் வீட்டு முன்பாக இருந்தபோது,